# ADM COURT, SANKARANKOVIL

தேதி 18.09.2025

C.C. 203/2024

**அ.சா.2 (தாமோதரன்) மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் மின்சார வாரியத்துறையில் எத்தனை ஆண்டுகளாக பணிபுரிந்தேன் என்றால் 36 ஆண்டுகளாக பணிபுரிந்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக சோதனை செய்வதற்கு என்னிடம் யார் புகார் மனு அளித்தார்கள் என்றால் யாரும் என்னிடம் புகார் மனு அளிக்கவில்லை. இவ்வழக்கு தொடர்பாக சம்பவ இடம் சென்று மின்மீட்டர் பெட்டி கைப்பற்றப்பட்டதா என்றால் கைப்பற்றப்பட்டது. மேற்படி மின்மீட்டர் பெட்டியானது சங்கரன்கோவில் உதவிசெயற்பொறியாளர் விநியோகம், கிராமப்புறம் அவர்களால் கைப்பற்றப்பட்டது. இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் செய்தார்கள். இவ்வழக்கு தொடர்பாக போலீசார் என்னை எங்கு வைத்து எப்போது விசாரித்தார்கள் என்றால் சம்பவதினத்தன்று சம்பவ இடத்தில்வைத்தும், அதை தொடர்ந்து வழக்கு பதிவு செய்தபிறகும் என்னை விசாரித்தார்கள். வழக்கு பதிவு செய்தபிறகு என்னை எங்கு வைத்து எப்போது விசாரித்தார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. நான் இவ்வழக்கு தொடர்பாக காவல்நிலையத்தில் புகார் மனு கொடுத்தேனா என்றால் நான் புகார் மனு கொடுக்கவில்லை. இவ்வழக்கு சம்பந்தமாக நான் சோதனைக்கு சென்றபோது என்னுடன் யார் உடன் வந்தார்கள் என்றால் கிராமப்புற உதவி செயற்பொறியாளர், உதவி பொறியாளர் மற்றும் களப்பணியாளர் ஆகியோர் சம்பவ இடத்திற்கு என்னுடன் வந்தனர். நான் சோதனைக்கு சென்ற சமயத்தில் சம்பவ இடத்தில் நிறுவனமானது செயல்பாட்டில் இருந்ததா என்றால் அந்த நிறுவனம் பூட்டப்பட்டிருந்தது. பூட்டப்பட்ட நிறுவனத்திற்குள் தொழில் சம்பந்தப்பட்ட மின்மோட்டார்கள் செயல்பட்டுக்கொண்டிருந்தனவா என்றால் இல்லை. மேற்படி நிறுவனத்திற்குள் ஆட்கள் யாரெனும் இருந்தனரா என்றால் எனக்கு தெரியாது. சம்பவம் நடந்த

இடத்திற்கு நான் செல்லாததால்தான் எனக்கு நிறுவனத்திற்குள் ஆட்கள் இருந்தனரா என்று தெரியவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு சம்பவத்திற்கு முன்பு சம்பவ இடத்தில் உள்ள நிறுவனத்திற்கு எதிராக மின்திருட்டு தொடர்பாக புகார் ஏதேனும் அளிக்கப்பட்டுள்ளதா என்றால் புகார் அளிக்கப்படவில்லை. மின்திருட்டு தடுப்பு அமலாக்கப்பிரிவால் மின்பயன்பாடுகள் தொடர்பாக கணினியில் கண்காணிக்கப்பட்டபோது மின்பயன்பாடுகளில் உள்ள downfall களை கண்டறிந்து இவ்வழக்கில் சோதனை செய்யப்பட்டது. சம்பவ இடத்திற்கு அருகாமையில் உள்ள Sub Station களிலிருந்து மேற்படி நிறுவனத்திற்கு எதிராக புகார் மனுக்கள் ஏதேனும் பெறப்பட்டதாக உதவி செயற்பொறியாளர் என்னிடம் கூறினாரா என்றால் இல்லை. சம்பவ இடத்திற்கு யார் முதலில் சென்றது என்றால் அனைவரும் சேர்ந்துதான் சென்றோம். பொதுவாக நிறுவனத்தில் பொருத்தப்படும் மின்மீட்டர் சிறிது காலத்திற்கு பிறகு சரியாக செயல்படாமல் இருந்தால் எங்களது துறை மேற்படி மின்மீட்டரை மாற்றிக்கொடுப்பர் என்றால் சரிதான். மின்மீட்டர்கள் சரியாக செயல்படாமல் இருப்பது தொடர்பான புகார்களை பெறுவதற்கு Sub Station களில் புகார் பதிவேடு உள்ளது என்றால் சரிதான். புகார் பதிவேடுகளை எந்த அதிகாரி பராமரிப்பார் என்றால் புகார் பதிவேடுகள் உதவிப்பொறியாளரால் பராமரிக்கப்படும். மின்மீட்டர் சரியாக செயல்படாதது தொடர்பான புகார்களை பெற்றதிலிருந்து எத்தனை நாட்களுக்குள் சரிசெய்து கொடுக்கப்படும் என்றால் சுமார் 3–5 நாட்களுக்குள் சரியில்லாத மின்மோட்டார் கழற்றப்பட்டு புது மின்மீட்டர் பொருத்தப்படும். எதிரி ரகுநாதனின் நிறுவனமான சக்தி விஷால் பைபர் தயாரிப்பு நிறுவனத்தில் பொறுத்தப்பட்டுள்ள மின்மீட்டர் செயல்பாட்டில் குறைபாடு உள்ளதாக கரிவலம்வந்தநல்லூர் Sub Station ல் புகார் அளிக்கப்பட்டு புகார் பதிவேட்டில் பதிவு ஏற்படுத்தப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி நிறுவனத்திலிருந்து புகார் பெறப்பட்டது தொடர்பாகவோ மேற்படி புகாரின் அடிப்படையில் புகார் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டது தொடர்பாகவோ

என்னுடன் சோதனைக்கு வந்த உதவி செயற்பொறியாளர் என்னிடம் கூறினாரா என்றால் இல்லை. எதிரி ரகுநாதனின் நிறுவனமான சக்தி விஷால் பைபர் தயாரிப்பு நிறுவனத்தில் பொறுத்தப்பட்டுள்ள மின்மீட்டர் செயல்பாட்டில் குறைபாடு உள்ளதாக கரிவலம்வந்தநல்லூர் Sub Station ல் புகார் அளிக்கப்பட்டது என்றாலும், மேற்படி புகாரின் பேரில் நடவடிக்கை எடுப்பதில் எங்களது துறை அதிகாரிகளால் காலம் கடத்தப்பட்டது என்றாலும் சரியல்ல. மேற்படி நிறுவனத்தில் உள்ள மின்மீட்டர் செயல்பாடு சரியாக இல்லாத காரணத்தால் அந்த நிறுவனத்தை எதிரியால் நடத்த இயலவில்லை என்றாலும், மேற்படி நிறுவனத்தின் மின்மீட்டரில் ஏற்பட்ட குறைபாடுகளின் காரணமாகத்தான் எங்கள் சோதனையில் மின்பயன்பாட்டில் Downfall இருந்ததாக கண்டறியப்பட்டது என்றாலும் சரியல்ல. எதிரி நிறுவனத்தால் எந்த தேதியிலிருந்து எந்த தேதி வரை மின்சாரம் திருடப்பட்டதாக என்னால் கூறமுடியுமா என்றால் என்னால் கூறஇயலாது. நான் சோதனைக்கு சென்ற நாளில் எதிரியின் மகனுக்கு சென்னையில் விபத்து ஏற்பட்டதால் எதிரி சென்னைக்கு செல்லவேண்டிய அவசரத்தில் இருந்தார் என்றாலும், அப்போது நான் அவரிடம் வெற்றுக்காகிதத்தில் கையெழுத்து பெற்றேன் என்றாலும் சரியல்ல. சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், எதிரியிடமிருந்து மோசடியாக கட்டாயப்படுத்தி நான் வெற்றுக்காகிதத்தில் கையெழுத்து பெற்றேன் என்றாலும் சரியல்ல. எதிரி அளித்த காசோலையில் இருந்த வங்கியின் பெயர் மற்றும் காசோலை எண் எனக்கு தெரியுமா என்றால் எதிரி IOB வங்கி காசோலை அளித்தார். எதிரி அளித்த காசோலையின் எண் எனக்கு ஞாபகம் இல்லை.

**எதிரிதரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**